03.02.2025 OS.No.155/2018

சாட்சி : PW 2 காசிவிஸ்வநாதன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

6, 7 பிரதிவாதிகள் தரப்பில் 4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9 முதல் 12, 17, 18, 19 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. மூக்கப்பன் என்பவரின் பெயர் மூக்கப்பன் கிடையாது மூக்கையா ஆகும். அந்த மூக்கப்பன் என்பவருக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால் ஏகப்பட்ட பூர்வீக சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்துக்கள் எந்தெந்த ஊரில் உள்ளது என்றால் காரைக்குடி தாலுகா இலுப்பக்குடியைச் சுற்றியுள்ளது. அந்த சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எந்த ஆண்டு கிரையம் பெறப்பட்டது என்றால் 1955 வருடம் கிரையம் பெறப்பட்டது. அந்த 1955 ம் ஆண்டு மூக்கையா அவர்களின் வாரிசுகளுக்கு என்ன வயது இருக்கும் என்றால் தெரியாது. அந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் மூலம் ஏற்பட்ட வருமானத்தின் மூலமாக தாவா சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் தவறு. தாவா சொத்தை அவர் எப்படி எந்த வருமானத்தை வைத்து வாங்கினார் என்றால் கணக்குபிள்ளை வேலை பார்த்து அந்த வருமானத்தின் அடிப்படையில் கிரையம் வாங்கினார்.

2. மூக்கையா சேர்வைக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 4 ஆண்கள் 1 பெண் யார் யார் என்று தெரியுமா என்றால் 2 வது மகன் மட்டும் தான் தெரியும் அவர் பெயர் அழகப்பன். மற்ற மகன்கள் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மூக்கையா உயில் எழுதிய காலத்தில் அந்த உயிலை எழுதி முடித்தவுடன் யாரிடம் கொடுத்தார் என்றால் அவரே எடுத்துச்சென்று விட்டார். உயில் கையோடு கொண்டு சென்ற பிறகு உயில் எங்கு யாரிடம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. இந்த உயில் எனக்கு இப்போது எப்படி தெரியும் என்றால் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு தான் உயில் குறித்து சாட்சி கையொப்பம் பற்றி சாட்சியம் அளிக்க அழைத்த விவரம் எனக்கு தெரியும். அழைப்பாணை வந்த பிறகு எனக்கு விவரம் தெரியும்.

3. நிரூபண வாக்குமூலம் யார் தயார் செய்தது என்றால் நான் எனது வழக்கறிஞர் அலுவலகத்தில் தயார் செய்தேன். நான் இந்த உயிலில் தற்சமயம் தயார் செய்யப்பட்டது என்றும் அது மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**14, 15, 16 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் கையெழுத்து செய்த உயில் எத்தனை பக்கங்கள் இருந்தது என்றால் 5 பக்கங்கள் இருந்தது. அந்த உயில் வெள்ளை நிறப் பேப்பரில் தயார் செய்யப்பட்டதா அல்லது பச்சை நிற பேப்பரில் தயார் செய்யப்பட்டதா என்றால் பச்சை நிற பாண்டு பேப்பரில் தயார் செய்யப்பட்டது. உயில் எழுதி வைத்து மூக்கையா ஊரைச்சார்நதவர்கள் யாரும் சாட்சி கையயெழுத்து செய்தார்களா என்றால் இல்லை. அந்த உயிலில் மற்றொரு கையொப்பம் செய்தவர் யார் என்றால் ஆத்தங்குடி ஊரைச்சேர்நத சுந்தர்ராஜ் ஆவார். உயிலில் எனது ஊர் எந்த ஊர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நேமத்தான்பட்டியாகும். உயில் எழுதிய சமயம் நான் எங்கு வசித்து வந்தேன் என்றால் காரைக்குடியில் வசித்து வந்தேன். உயிலில் ஏன் நேமத்தான் பட்டி முகவரி எழுதினேன் என்றால் சொந்த ஊர் நேமத்தான்பட்டி என்பதால் அவ்வாறு எழுதினேன். எனது ஊருக்கும் மூக்கையா ஊருக்கும் எவ்வளது தூரம் என்றால் 20 கி.மீ இருக்கும். ஆத்தங்குடிக்கும் மூக்கையா பிறந்த ஊருக்கும் எவ்வளது தூரம் இருக்கும் என்றால் 25 கி.மீ இருக்கும். இந்த உயில் எங்கு தயார் செய்யப்பட்டது என்றால் பள்ளத்தூரில் தயார் செய்யப்பட்டது. யாருடைய அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் வி.லெட்சுமணன் தலைமை ஆசிரியர் வீட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது. லெட்சுமணன் தான் அந்த உயிலை எழுதினாரா என்றால் மூக்கையா சேர்வை சொல்லிய விவரங்களை அவர் குறிப்பெடுத்துக்கொண்டு தட்டச்சு செய்து கொடுத்தார்.

2. லெட்சுமணன் என்பவருக்கு தட்டச்சு செய்யத் தெரியும் என்றும் அவர் வீட்டில் தட்டச்சு இயந்தரம் இருந்தது என்றால் சரிதான். அந்த உயில் எழுதும் சமயத்தில் லெட்சுமணன் பணியில் இருந்தாரா இல்லை ஓய்வு பெற்று விட்டாரா என்றால் ஆசிரியர் பணியில் இருந்தார். அந்த உயில் எழுதிப்பட்ட கிழமை எந்த கிழமை என்றால் ஞாபகம் இல்லை, தேதி மட்டும் தெரியும். எத்தனை மணிக்கு உயில் எழுதினார்கள் என்றால் காலை 11.00 மணிக்கு உயில் எழுதினார்கள். லெட்சுமணனின் வருகைப்பதிவேட்டை பார்த்தால் அவர் பணியில் இருந்தாரா அல்லது விடுமுறையில் இருந்தாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

3. அவர் எந்த பள்ளியில் வேலை பார்த்தார் என்றால் ஈரோடு பக்கம் உள்ள திருப்பூரில் வேலை பார்த்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ3 ல் உயிலில் முதல் பக்கத்தில் கீழ் பக்கம் 2 என தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ல் 2வது பக்கத்தில் மேற்பகுதியில் 2 எனவும் கீழே 3 எனவும் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உயிலில் உள்ள கையெழுத்தும் மூக்கையா 1955ல் கிரையப்பத்திரத்தில் உள்ள மூக்கையாவின் கையெழுத்தும் வேறுபாடாக இருக்கிறது என்றால் என் முன்னிலையில் தான் அவர் கையெழுத்து செய்தார், வேறுபாடு உள்ளதா என்றால் வயதின் காரணமாக வேறுபாடு இருக்க வாய்ப்புள்ளது. 1983ம் வருட காலக்கட்டத்தில் இந்த உயில் எழுதப்பட்டுள்ள பச்சை நிற பாண்டு பேப்பர் உற்பத்தி செய்யப்படவில்லை என்று சொன்னால் சாதாரணமாக பாண்டு பேப்பர் எனதான் சொல்வார்கள். பச்சை நிறப்பேப்பர் அப்போது இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பாண்டு பேப்பருக்கும் சாதாரண பேப்பருக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். உயில் எழுதிய பேப்பர் சாதாரண பச்சை நிறப்பேப்பர் என்றால் பாண்டு பேப்பர் தான். நான் சொல்வது தவறு என்றும் உயிலானது தற்போது உற்பத்தி செய்யப்படுகிற பச்சை நிறப்பேப்பரில் தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4. வா.சா.ஆ3 உயிலானது மலரணையாக நான் மற்றும் லெட்சுமணன் ஆகியோர் கூட்டுச்சேர்ந்து உற்பத்தி செய்தோம் என்றாலும் அது மோசடியான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் எனக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்பதினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூக்கையா சேர்வை வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக மூக்கையா சேர்வை சொன்னார்கள். எந்த வருடம் பாகப்பிரிவினை செய்தார்கள் என்றால் 1982ம் வருடம் ஆகும். மேற்படி பாகப்பிரிவினை எழுதப்பட்டதா என்றால் எழுதப்பட்டு உள்நாட்டு வழக்கப்படி எழுதப்பட்டதாக சொன்னார்கள். அந்த பாகப்பிரிவினையில் உயிலில் கையெழுத்து செய்த நபர்கள் யாரும் கையெழுத்து செய்தார்களா என்றால் தெரியாது. வா.சா.ஆ3 மலரணையாக ஏற்பட்டது என்றும் அதனடிப்படையில் வாதிகளுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.